EASTERN UNIVERSITY
23 AUG 2013

# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

## முதலாம் வருட கலைமாணித் தேர்வு 2010/2011

## (யூன்/யூலை 2013) (வெளிவாரி)

## SOC 101 சமூகவியலும் மானுடவியலும் அறிமுகம்

நேரம் : 03 மணித்தியாலங்கள்

**ஏதேனும் ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

---

01. சமூகவியல் என்பதன் அர்த்தத்தைச் சுருக்கமாக விளக்கி, சமூகவியல் ஒரு கற்கைப் புலமாக உருவாவதற்கு உந்துதல் அளித்த புலமைசார் காரணிகளை விபரிக்குக.
(20 புள்ளிகள்)

02. சமூகவியலை ஒரு விஞ்ஞானமாகக் கருத முடியுமா என்பதற்கான உமது தர்க்கத்தினை, அக்கற்கைப் புலத்தின் தன்மையைப் பகுப்பாய்வு செய்வதனூடாகத் தெளிவுபடுத்துக.
(20 புள்ளிகள்)

03 அகஸ்ட் கொம்ரினால் பிரேரிக்கப்பட்ட நேர்க்காட்சிவாதக் கருத்துக்களுக்கும், புறவயரீதியான சமூகவியலுக்குமிடையில் உட்கிடக்கையாகக் காணப்படும் தொடர்பினை ஆராய்க.
(20 புள்ளிகள்)

04 சமூகத்தின் முரண்பாட்டுத்தன்மையை விபரிப்பதில் கால்மாக்ஸிலிருந்து மக்ஸ் வெபர் வேறுபடும் தன்மையினை விபரிக்குக.
(20 புள்ளிகள்)

05 பின்வருவன தொடர்பான எமைல் டேர்க்கைமின் விளக்கங்களை விபரிக்குக.
அ) சமூக ஒருமைப்பாடு (10 புள்ளிகள்)
ஆ) சமூக உண்மை (10 புள்ளிகள்)

06 "சமூக ஒருமைப்பாடு என்பது சமூகக்கூறுகளின் ஒருங்கிணைந்த செயற்பாடுகளிலேயே தங்கியுள்ளது" செயற்பாட்டுவாதிகளின் இக்கூற்றினைத் தெளிவுபடுத்துக.
(20 புள்ளிகள்)

07 மனிதனின் பல்வகைத்தன்மையை ஆராய்கின்ற ஒரு கல்விப்புலமாக மானிடவியல் உருவாவதற்குக் காலணித்துவத்தின் தாக்கங்களைச் சுருக்கமாக விபரிக்குக.
(20 புள்ளிகள்)

08 பின்வருவனவற்றுள் எவையேனும் நான்கிற்கு சிறுகுறிப்பெழுதுக.

அ) சமூகக்கட்டுப்பாட்டின் முறைசாராக் காரணிகள் (5 புள்ளிகள்)
ஆ) சமூகமயமாக்கலில் சகபாடிக் குழுக்களின் பங்கு (5 புள்ளிகள்)
இ) முதல்தரச் சமூகக் குழுக்கள் (5 புள்ளிகள்)
ஈ) சாதிக்கட்டமைப்பு (5 புள்ளிகள்)
உ) ஜேர்மனிய சமூகவியல் மரபு (5 புள்ளிகள்)